**பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்**

2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பின்வரும் துறைகளில் நிரூபிக்கப்பட்ட அறிவு, அனுபவம் மற்றும் கீர்த்தியுடன் பொதுவாழ்வில் மேன்மைமிக்கவர்களாக இருக்கும் நபர்களின் மத்தியில் இருந்து பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்படுவதற்கு அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களை / பெயர்குறித்த நியமனங்களைக் கோருகின்றது;

- *சட்டம் அல்லது சட்டவாக்கம்;*
- *தொழிற்சங்கவாதம்;*
- *முகாமைத்துவம் மற்றும் நிருவாகம்;*
- *பொருளாதார அபிவிருத்தி;*
- *சுகாதாரம்;*
- *கல்வி;*
- *பெண்களின் வலுவூட்டல் அல்லது பெண்களில் தொழில் இயல்திறனை அதிகரிப்பதற்கான ஈடுப்பாடு*

மேலும், நபர் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதில் இருந்தும் அல்லது அதன் உறுப்பினராகத் தொடர்ந்து சேவையாற்றுவதில் இருந்தும் தகுதியவற்றவராக்கப்படுவார்:

- அத்தகைய ஆள் பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அலலது வந்தால்;
- இலஙகைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்தால்;
- தகுதிவாயந்த நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் கடனிறுக்க வகையற்றவரொருவராக தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டால்;
- சுகவனம் அல்லது வேறு உள அல்லது உடற்றகுதியீனம் காரணமாக பதவியில் தொடர்வதற்கு தகுதியற்றவராகவிருந்தால் அல்லது தகுதியற்றவராக வந்தால்;
- தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதனமற்றவரென வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;
- இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொனறை அனுபவித்திருந்தால் அல்லது அனுபவித்துக்கொண்டிருந்தால்; அல்லது
- ஆணைககுழுவின் உறுப்பினர் ஒருவராக அவர் நியமிக்கப்பட்ட முன்னைய காலமொனறின் போது பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தால்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தகவல் படிவம் **அ** இற்கு அமைவாகவும் பெயர்குறித்த நியமனங்கள் தகவல் படிவம் **ஆ** இற்கு அமைவாகவும் தயாரிக்கப்பட வேண்டும். இப்படிவங்கள் www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் *பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்* என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ பெயர் நியமனங்கள் **2025 ஜனவரி 20 அன்று** அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் '*பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்*' எனக் குறிப்பிடவும்;

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

பெயர் குறித்த நியமனங்கள் அனுப்பப்பட்டால், படிவங்கள் பெயர் குறித்து நியமித்தவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதோடு, பெயர் குறித்து நியமிக்கும் அதிகாரசபையினால் அரசியலமைப்புப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024 டிசம்பர் 29**